6th March 1969]

Tamil as official language in Secretariat

* 143 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the names of the Departments where Tamil has been introduced as official language in the Tamil Nadu Secretariat?

தலைமைச் செயலகத்தில் தமிழில் நடவடிக்கை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தலைமைச் செயலகத்தில் எந்தெந்தத் துறைகளில் தமிழில் நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சட்டம், சட்டமன்றம், சட்டப் பேரவை, நிதி ஆகிய துறைகள் நீங்கலாக மற்ற எல்லாத் துறைகளிலும் தமிழ்த்திட்டத்தின் முதல் நிலை 1—5—1966 முதல் செயற்பட்டு வருகின்றது. இதன்படி பொதுமக்களிடமிருந்து தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதிலளிக்கப்பெறும்.

(2) தமிழ் வளர்ச்சித் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் செய்தி விளம்பரத்துறையிலும் தமிழ்த்திட்டம் முழு அளவில் செயற்படுத்தப் பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட இரு துறை களிலும் பொதுவாக எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடத்தப் பெறுகின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, சட்டத் துறையிலும் நடவடிக்கைகள் தமிழிலேயே நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா ? குறிப்பாக சட்டப் புத்தகங்கள் தமிழில் அச்சிடப்பட்டு வினியோகிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இதற்குச் சட்டச் சொற்கள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட வேண்டுமென்று கருத்து சொல்லப் பட்டு ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு சட்டச் சொற்களை உருவாக்கி இருக்கிறது. அப்புத்தகம் சில நாட்களில் வெளியிடப் படும். அந்தக் கிளாசரி முடிந்துவிட்டால், அந்த அடிப்படையில் மசோதாக்கள் எல்லாம் தயார் செய்வதற்குக் குழு அமைத்திருக் கிறோம். சில நாட்களில் பல நீதிபதிகளின் தலைமையில் அது நடைபெற இருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: இப்போது வெளியிடப்படும் ஃபோர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட் 90 சதவிகிதத்திற்கு மேலாக ஆங்கிலத்திலேயே அச்சடிக்கப்பட்டு வருகிறது. அதை முழுவதும் தமிழிலேயே அச்சடித்து அனுப்புவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தமிழில் எங்கெங்கே சாத்தியப்படுகிறதோ அங்கெல்லாம் அச்சு அடித்துக் கொடுக்கப் படுகிறது. விரைவாக எல்லாத் துறையிலும் அது பின்பற்றப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.